தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.

தொலைபேசி: 044 – 22201337

மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள்
முறைமன்ற நடுவர், சென்னை – 600 032.

முன்னிலை: மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப.(ஓ)

*******

ஆணை எண்.007/மா/2021

ஆணை நாள். 19.03.2021

திரு. எம். ராஜசேகரன்,
நாமக்கல் மாவட்டம். – முறையீட்டு
மனுதாரர்.

முன்னாள் மாகராட்சி தலைவர்
ஈரோடு மாநகராட்சி. – எதிர் மனுதாரர்கள்
மாநகராட்சி ஆணையாளர்,
ஈரோடு மாநகராட்சி.

நாமக்கல் மாவட்டம் எண்.27/8, கிழக்குத் தெரு, பொத்தனூர் அஞ்சல் என்ற முகவரியில் வசிக்கும் திரு. எம். ராாசேகரன் அவர்களின் 23.03.2020 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறை மன்ற நடுவத்தில் பெறப்பட்டு 007/2021 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை.

நாமக்கல் மாவட்டம் எண். 27/8, கிழக்குத் தெரு, பொத்தனூர் அஞ்சல் என்ற முகவரியில் வசிக்கும் திரு. எம். ராஜசேகரன் என்பவர் ஈரோடு மாநகராட்சியில் வேளாளர்

மகளிர் கல்லூரி, ஈரோடு வாசவி கல்லூரி, ஈரோடு ஆர்ட்ஸ் & சயின்ஸ் கல்லூரி மற்றும் லோட்டஸ் மருத்துவமனை ஆகிய கட்டிடங்கள் மாநகராட்சியில் எந்தவித அனுமதியும் பெறாமல் கட்டப்பட்டுள்ளதாகவும் அதற்கு சொத்து வரியும் விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து உரிய நடவடிக்கை கோரி இம்முறை மன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2) ஈரோடு மாநகராட்சி ஆணையாளர், மனுதாரர் ஆகியோர் 24.02.2021 அன்று நேரடி விசாரணைக்கு அழைக்கப்பட்டனர். ஈரோடு மாநகராட்சி ஆணையர் 24.02.2021 அன்றைய நேரடி விசாரணைக்கு வர இயலாமைக்கான காரணத்தை தெரிவித்து மேற்படி விசாரணைக்கு ஈரோடு மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் திரு. பூ. பாஸ்கர் என்பவரை அன்றைய விசாரணைக்கு ஆஜராகி விளக்கம் அளிக்க அனுமதி வழங்குமாறு 20.02.2021 நாளிட்ட கடிதம் அனுப்பியிருந்தார். அக்கடிதம் இம்முறை மன்ற நடுவத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டு உதவி செயற்பொறியாளர் மற்றும் மனுதாரர் ஆகியோர்களிடம் 24.02.2021 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது.

3) முறையீட்டு மனுதாரர் தமது வாக்குமூலத்தில் " ஈரோடு மாநகராட்சியில் உள்ள வேளாளர் மகளிர் கல்லூரி, வாசவி கல்லூரி, ஈரோடு ஆர்ட்ஸ் அண்டு சயின்ஸ் கல்லூரி மற்றும் லோட்டஸ் மருத்துவமனை, பரணி பாவேந்தன் மருத்துவமனை, செந்தில் மல்டி ஸ்பெசாலிடி மருத்துவமனை ஆகிய கட்டிடங்கள் அனுமதியின்றி கட்டப்பட்டுள்ளது, மேலும் அவற்றிற்கு கதவிலக்கம் மற்றும் சொத்து வரி ஆகியவையும் விதிக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட ஒப்புதல் இல்லாமல் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை இடிப்பதற்கு நகராட்சி எவ்வித நடவடிக்கை எடுக்கவில்லை என தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் என்னுடைய புகார் மனுவையே வாக்குமூலமாக பதிவு செய்து கொள்ளுமாறு தங்களை கேட்டுக்கொள்கிறேன் '' என்று தெரிவித்துள்ளார்.

4) ஈரோடு மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் தமது வாக்குமூலத்தில், " மனுதாரர் ராஜசேகர் அவர்கள் குறிப்பிட்டுள்ள கல்லூரிகள் கட்டப்பட்டு சுமார் 30 வருடங்களும், மனுதாரர் குறிப்பிட்டுள்ள மருத்துவமனைகள் கட்டப்பட்டு 15 வருடங்கள் ஆகும். 30 ஆண்டுகள் மற்றும் 15 ஆண்டுகளுக்கு முன்னர் அனுமதி பெறாமல் கட்டப்பட்டுள்ள மற்றும் அனுமதி பெற்று கட்டப்பட்டுள்ள கட்டடங்களின் மீது நடவடிக்கை மேற்கொள்ள வழிவகையில்லை. அனுமதியின்றி கட்டப்படும் கட்டடங்களுக்கு சதுர அடிக்கு ஒரு குறிப்பிட்ட தொகை அபராதக் கட்டணம் நிர்ணயம் செய்யப்படுகிறது. அந்த அபராத கட்டணமானது சொத்து வரியுடன் சேர்த்து வசூல் செய்யப்படுகிறது. மேலும், இது தொடர்பாக ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அளித்துள்ள அறிக்கையை எனது வாக்குமூலமாக பதிவு செய்து கொள்ளுமாறு தங்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன் '' என்று தெரிவித்துள்ளார்.

5) ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் தமது அறிக்கையில். மனுதாரர் தமது மனுவில் தெரிவித்துள்ள ஈரோடு மாநகராட்சி, ரீ.ச.எண்.26/1–ல் சூரியம்பாளையம் கிராமம், சித்தோடு முதல் பவானி செல்லும் மெயின் சாலையில் செயல்பட்டு வரும் ஸ்ரீ வாசவி கல்லூரி கட்டடங்கள் கட்ட சித்தோடு புதுநகர் வளர்ச்சிக்குழுமம் திட்ட அனுமதி எண்.10/93 நாள். 25.02.1993–ன்படியும், திட்ட அனுமதி எண். 48/93 நாள் 16.07.1993–ன்படியும் திட்ட அனுமதி எண்.26–A, B/2007 நாள் 13.07.2007–ன்படியும் திட்ட அனுமதி வழங்கப்பட்டதன் பேரில். செயல் அலுவலர், சூரியம்பாளையம் பேரூராட்சி அவர்களால் மூ.மு.32/1993 நாள். 12.03.1993–ன் படியும், மூ.து. 251/1993 நாள் 06.08.1993–ன் படியும், க.உ.எண்.7/2007–2008 நாள் 20.07.2007–ன்படியும். கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி ஸ்ரீ வாசவி கல்லூரி வளாகத்திலுள்ள பிற கட்டிடங்கள் கட்ட சூரியம்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் கடித மூ.மு.எண். 540/81, நாள். 21.07.1981 , மூ.மு.85/83 நாள். 09.02.83, மூ.மு. 717/83 நாள். 24.10.83, மூ.து.494/84 நாள். 10.08.84, மூ.மு.573/84 நாள். 04.09.84, மூ.மு.316/86 நாள். 13.08.86, மூ.மு. 377/86 நாள். 22.09.86, மூ.மு.307/87 நாள். 06.10.87, மூ.மு.444/87 நாள். 27.11.87, மூ,மு. 232/89 நாள் 31.05.89–ன்படி கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஈரோடு மாநகராட்சி, ரீ. சர்வே எண். 412/16, கதவு எண். 74, சம்பத் நகரில் செயல்பட்டு வரும் திரு.பாலகிருஷ்ணன் என்பவருக்கு சொந்தமான பரணி பாவேந்தன் என்ற மருத்துவமனைக்கு ஈரோடு உள்ளூர் திட்டகுழும திட்ட அனுமதி எண். 19/2003–ன்படி மருத்துவமனை கட்டிடம் கட்டிக் கொள்ள தரைகீழ் தளம், தரைத்தளம், முதல் தளம், இரண்டாம்தளம் மற்றும் மூன்றாம் தளம் ஆக மொத்தம் 5 தளங்கள் கட்டிக் கொள்ள திட்ட அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் மேற்கண்ட மருத்துவமனை கட்டிடத்திற்கு வீரப்பன் சத்திரம் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களால் க.ம.எண். 150/2003–2004 என எண்ணிடப்பட்டு கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஈரோடு மாநகராட்சி, நகரளவு எண். 111, வார்டு.B. பிளாக். 1, பெருந்துறை சாலையில் செயல்பட்டு வரும் திரு. சி.செந்தில்வேலு மற்றும் திருமதி. எஸ். செல்வகுமாரி ஆகியோருக்கு சொந்தமான செந்தில் மல்டி ஸ்பெசாலிடி மருத்துவமனைக்கு ஈரோடு நகராட்சி ஆணையாளர் அவர்களால் B.A. 217/91, நாள். 26.02.1991–ன்படியும், B.A. 3/03, நாள். 29.01.2003, B.A. 42/03 நாள். 21.03.2003 –ன்படியும், B.A. 4/03 நாள். 29.01.2003ன்படியும், தரைகீழ் தளம், தரைதளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளம் கொண்ட மருத்துவமனை கட்டடம் கட்டிக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஈரோடு மாகராட்சி ரீசர்வே எண். 525/1B. 2B, 4B, 5B, 526/1B.4,7, 648/1,2,3,4 மற்றும் 649/2,3,4–ல் ஈரோடு முதல் சென்னிமலை வரை செல்லும் பிரதான சாலையில்

ரங்கம்பாளையத்தில் செயல்பட்டு வரும் ஈரோடு கலை மற்றும் அறிவியில் கல்லூரியானது சுமார் 53 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டு செயல்பாட்டில் இருந்து வருகிறது. மேற்படி கல்லூரி கட்டடம் கட்ட, கட்டட அனுமதி பெறப்பட்ட விவரங்களை சமர்ப்பிக்கக் கோரி மேற்படி கல்லூரி நிர்வாகத்திடம் கோரப்பட்டது. மேற்படி கட்டம் கட்டப்பட்டு 50 ஆண்டுகளுக்கு மேல் ஆகி விட்டதால் கட்டட அனுமதி தொடர்பான ஆவணங்கள் ஏதும் கிடைக்கப் பெறவில்லை என்று கல்லூரி நிர்வாகத்தால் தெரிவிக்கப்பட்டது.

ஈரோடு மாநகராட்சி, ரீசர்வே எண். 76/2, பெருந்துறை சாலை, திண்டலில் செயல்பட்டு வரும் வேளாளர் மகளிர் கல்லூரி கட்டடம் கட்ட, ஆணையாளர், ஈரோடு ஊராட்சி ஒன்றியம் அவர்களால் மூ.மு.13632/1981 நாள். 28.11.1981–ன் படியும், மூ.மு. 11388/1987 நாள். 03.02.1987ன்படியும், மூ.மு.எண். 7673/1992 நாள். 14.02.1992–ன்படியும் கட்டட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் ஈரோடு ஊராட்சி ஒன்றியம், திண்டல் ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் நடவடிக்கைகளின் மூ.மு.எண். 43/1998–1999 நாள். 08.10.1998–ன்படியும், மூ.மு. எண். 118/2003–2004 நாள். 09.01.2004–ன்படியும் கட்டட அனுமதிர வழங்கப்பட்டுள்ளது.

ஈரோடு மாநகராட்சி, ரீசர்வே எண். 1151/1 (பழைய க.ச.எண். 1106, 1108 ), கதவு எண். 90, பூந்துறை மெயின் ரோட்டில் செயல்பட்டு வரும் திரு. இ.கே. சகாதேவன் என்பவருக்கு சொந்தமான லோட்டஸ் மருத்துவமனைக்கு ஈரோடு உள்ளூர் திட்டகுழும திட்ட அனுமதி எண். 4–ஏ,/1998, நாள் 29.04.1998–ன்படி மருத்துவமனை கட்டிடம் கட்டிக் கொள்ள, தரை கீழ் தளம், தரை தளம், முதல் தளம், மற்றும் இரண்டாம் தளம் ஆக மொத்தம் 4 தளங்கள் கட்ட திட்ட அனுமதி வழங்கியதன் பேரில், மேற்கண்ட மருத்துவமனை கட்டிடத்திற்கு காசிபாளையம் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களால் க.ம. எண். 6/1999–2000 நாள் 06.05.1999 என எண்ணிடப்பட்டு கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம், ஈரோடு மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் ஈரோடு மாநகராட்சி உதவி செயற்பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவைகள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. இந்நேர்வில் மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதி இன்றி கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் எனக்குறிப்பிட்டுள்ள கட்டிடங்கள் அனைத்தும் முறையாக அனுமதி பெற்று கட்டப்பட்டுள்ளதாக கூறும் ஆணையாளரின் அறிக்கை பதிவு செய்யப்படுகிறது. மேலும் இந்நிகழ்வுகள் அனைத்தும் 5 ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற நிகழ்வுகள் என தெரிய வருகிறது. தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ சட்டம், 2014–ன் சட்டப்பிரிவு 10 (3) (C ) –ன் கீழ் 5 ஆண்டுகளுக்கு முற்பட்ட நிகழ்வுகள் எதனையும் இம்முறை மன்ற நடுவத்தால்

விசாரணை ஏதும் செய்யாமல் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டினை இந்நிலையில் முடிக்கலாம் என முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2021 ஆம் ஆண்டு மார்ச்சு, திங்கள், 19 ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1) திரு. எம். ராஜசேகரன்,
எண்.27/8, கிழக்குத் தெரு,
போத்தனூர் அஞ்சல்,
நாமக்கல் மாவட்டம்.
நாமக்கல் – 638 181.

2) முன்னாள் மாநகராட்சி தலைவா,
ஈரோடு மாநகராட்சி,
ஈரோடு.

3) மாநகராட்சி ஆணையாளர்,
ஈரொடு மாநகராட்சி.

நகல். முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.

இகோ/உதிரிகள்.